SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

www.snsgroups.com

## பயிற்சித்தாள் 1

**வகுப்பு :** **பாடம் :** தமிழ்

**தேதி :** **கடைசி நாள்:**

**1. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

நம் நாட்டில் வார்த்தைகளில் வருணிக்க முடியாத, கண்டுகளிக்கக் கூடிய, கற்பனையும் கலைநயங்களும் கொட்டிக்கிடக்கும் ஆலயங்களும், மலைக் கோயில்களும், குடைவரைக் கோயில்களும் காணும் இடமெல்லாம் காட்சிதருகின்றன. காணவிரும்பும் அனைவரும் கண்டதும் பண்டைய மக்களின் கடின உழைப்பையும், கற்பனை வனப்பையும் போற்றாதிருக்க முடியாது. அத்தகைய வரலாற்றுக் கலைப் பெட்டகங்களில் ஒன்று தான் நெல்லையப்பர் திருக்கோயில். இக்கோயில் 1300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. நெல்லையப்பர், காந்திமதியம்மாள் இருவருக்கும் தனித்தனியே இருந்த கோயில் 1647-இல் வடமலையப்ப பிள்ளை என்பவரால் சங்கிலி மண்டபம் கட்டப்பட்டு இரண்டும் இணைக்கப்பட்டது. 14 ஏக்கர் பரப்பளவில் 850 அடி நீளம் 756 அடி அகலம் கொண்ட இத்திருக்கோயிலில் தாமிரசபை எனப்போற்றப்படும் நடராசர்கலை நடனக்கோலம் காணக் கண் கோடி வேண்டும். பாண்டிய மன்னர்களின் திருப்பணிகள் கல்லிலும் கலைவண்ணம் காட்டின. இசைத்தூண்கள் இக்கோயிலின் சிறப்பம்சமாகும். ஒரே கல்லில் பத்துத் தூண்கள் அவற்றின் வேறுபட்ட இசையொலிகள் சிற்பிகளின் கலைநயம் இசைநயம் கற்பனைநயம் ஆகியவற்றை வெளிப்படுத்துவன. படித்துணர்வது இன்பம் தரும் என்றாலும் பார்த்துணரும் பாங்குக்கு ஈடாகுமோ.

**வினாக்கள்**

i. நெல்லையப்பர் கோயில் எத்தனை ஆண்டுகள் பழமையானது?
(அ) 300 ஆண்டுகள் (ஆ) 500 ஆண்டுகள்
(இ) 1300 ஆண்டுகள் (ஈ) 2000 ஆண்டுகள்

ii. இக்கோயில் தூண்களின் சிறப்பம்சம் யாது?

(அ) ஒரே கல்லில் 10 தூண்கள், இசைநயம், கலைநயம், கற்பனைநயம்
(ஆ) ஒரே கல்லில் 5 தூண்கள், சிறியவை
(இ) கற்களால் ஆன கலை அழகுத் தூண்கள்
(ஈ) பல கற்களால் ஆன கலை நயமிக்க தூண்கள்

iii. இங்குவீற்றிருக்கும் அம்பாளின் பெயர் யாது?
(அ) இந்துமதி (ஆ) சந்திரமதி
(இ) கோமதி (ஈ) காந்திமதி

iv. கோயில் எத்தனை ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது?
(அ) 10 ஏக்கர் (ஆ) 15 ஏக்கர்
(இ) 7 ஏக்கர் (ஈ) 14 ஏக்கர்

v. படித்துணர்வதிலும் இன்பம் தருவது எது?
(அ) நினைத்துணர்வது
(ஆ) அப்படியே மறப்பது
(இ) பார்த்துணர்வது
(ஈ) சோதித்துணர்வது

**2. கடிதம் எழுதுக.**

நீ வாழும் பகுதியில் அஞ்சல்பெட்டி அமைத்துத்தர அஞ்சலகத் தலைமை மேலாளாருக்கு வேண்டுகோள் கடிதம் எழுதுக.

**கடிதத்தில் உனது பெயரும், முகவரியும்:** பூரணன்/பூரணி, எண்.3, கம்பர் தெரு, சோமசுந்தரம் குடியிருப்பு, மதுரை எனக் கொள்க.